காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் பட்டி தொட்டியெங்கும் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை

# எளியோர் எழுச்சி நாளாக கோலாகலமாகக் கொண்டாடுவோம்!

## காஞ்சி வடக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவு! மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

சென்னை, அக்.15-

கழக இளைஞர் அணிச் செயலாளர் - தமிழ்நாடு துணை முதல் அமைச்சர் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47 வது பிறந்தநாளை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் பட்டி தொட்டியெங்கும் “எளியோர் எழுச்சி நாளாக” எழுச்சியுடன் கழகத்தினர் அனைவரும் கோலாகலமாக கொண்டாடி மகிழ்ந்திடுவோம் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் ஆலந்தூர் கத்திப் பாரா ஜோதி திரையரங்கம் அருகில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

தலைமை தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ., சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ரத்னா லோகேஸ்வரன், கே.எஸ்.ரவிச்சந்திரன், சி.தசரதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எல்.இதயவர்மன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், த.ஜெயக்குமார், இ.ஜோசப் அண்ணாதுரை, எஸ்.இந்திரன், டி.காமராஜ், பெருங்களத்தூர் சேகர், மாடம்பாக்கம் நடராஜன், ஏ.கே. கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், எம்.டி.லோகநாதன், நகரச் செயலாளர்கள் டி.பாபு, ஜெ.சண்முகம், எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார்,

தொ.மு.ச. பேரவைச் செயலாளர் இரா.பொன்னுராம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய் ஜெயகாந்த் பாரதி,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்ராகிம், ஆர்.டி.பூபாலன், க.தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், மா.கணேஷ்பாபு, இரா.பாஸ்கரன், சே.அருள்தேவி, மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், தையூர் வீ.விஜயகுமார், ப.இராமமூர்த்தி, டி.கே.கமலகண்ணன், கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன், எல்.பிரபு, எஸ்.ஆல்பர்ட், ஜா.செந்தில்தேவராஜ், பா.ஞானபிரகாசம், சசிகலா, த.வினோத்குமார், டி.பி.செந்தில்குமார், பொன்.ரமேஷ்கவி, ஜான் தினகரன், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், கே.ஆர்.ஆனந்தன், டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், ஆர்.ஆர்.ஜெயராம்மார்த்தாண்டம், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இரங்கல் தனி தீர்மானம்:

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் அன்பு மருமகன் அரசியல் மேதை முரசொலிமாறன் அவர்களின் சகோதரர் தலைசிறந்த எழுத்தாளர் - பத்திரிக்கையாளர் முரசொலி செல்வம் அவர்கள் மறைந்தார் என்ற செய்தி கழகத்தினர் அனைவரின் இதயங்களில் ஆழ்ந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

தலைவர் கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளையான முரசொலியின் பணிகளை தன் தோள்களில் சுமந்து கொண்டு இளமைப் பருவம் முதல் தனது வாழ் நாள் இறுதி வரை திறம்பட செயலாற்றியவர் அண்ணன் முரசொலி செல்வம். மறைவதற்கு முன்னாள் இரவு கூட முரசொலி கட்டுரை எழுதுவதற்காக குறிப்புகளை சேகரித்து வைத்து விட்டு உறங்கச் சென்றவரை இயற்கை பறித்துக் கொண்டது.

கழகத்தின் போர்வாளான முரசொலி நாளேட்டின் ஆசிரியராகப் பொறுப்பேற்று, தன் எழுத்துக்களால் ஜனனாயக குரலாய் ஒளித்தவர். கருத்துரிமையின் கழுத்தை நெறிக்கும் வகையில் இந்தியாவில் எந்த மாநில சட்டமன்ற வரலாற்றிலும் இல்லாத வகையில், சட்டமன்றக் கூண்டில் ஏற்றிய போது ஜனனாயக விரோத செயலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், கருப்புச் சட்டை அணிந்து அடக்குமுறைக்கு அஞ்சாமல் நெஞ்சுரத்துடன் மன்னிப்பு கேட்க மறுத்து - பத்திரிக்கை சுதந்திரத்தை பாதுகாத்த கருத்துரிமை போராளி கொள்கை சிங்கம் அவர்.

இயக்கப் பணி - பத்திரிக்கைப் பணி - திரைத் துறைப் பணி என அனைத்துத் துறைகளிலும் சிறந்த முத்திரை பதித்தவர். எந்த நிலையிலும், கழகமே மூச்சு என வாழ்ந்தவர் அவர்.

“சிலந்தி” என்ற பெயரில் அவர் எழுதிய உணர்ச்சி மிகு கட்டுரைகளில் சில நேரங்களில் தந்தை பெரியாரின் உக்கிரம் தெரியும். பல நேரங்களில், பேரறிஞர் அண்ணாவின் அறிவு கூர்மை மிளிரும் - நிறைய நேரங்களில் தலைவர் கலைஞரின் அரசியல் சாணக்கியம் தெரியும்.

அவர் அமைதியாக தோற்றம் அளித்தாலும், ஆழத்தில் இருந்து பீறிட்டுக்கும் நெருப்பு குழம்பை போன்றது அவருடைய எழுத்துக்கள். அவருடைய கைவண்ணத்தில் உருவான சின்ன பெட்டி செய்திக் கூட அக்னிக் குஞ்சு போல அதிகாரக் காடுகளைப் பற்ற வைத்து பதறவைத்திருக்கிறது.

அந்த வகையில், முரசொலியில் அவர் கடைசியாக எழுதிய “ஒரு கேள்வி ஒரு பதில்” என்ற பெட்டி செய்தியில் நம்முடைய இளைய தலைவர் மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை பற்றி முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறிய கருத்துக்கு அதிரடியாக பதில் தந்த கழகத்தின் கொள்கை பேனா அவர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் மறைவிற்கு பின் அன்பு அண்ணன் தளபதி அவர்களுக்கு தோள் கொடுத்து தாங்கி நின்ற கழக கொள்கைத் தூண் திராவிட இயக்கத்தின் படைக்கலன் - கழகத்தின் கொள்கை செல்வம் - பாசமிகு அன்பு அண்ணன் முரசொலி செல்வம் அவர்களின் மறைவிற்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.



இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்ற தீர்மானங்கள்:

காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரம் மண்ணில், அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட வரலாற்று பேரியக்கமான திராவிட முன்னேற்ற கழகத்தின் பவள விழாவை, கொள்கைக் கூட்டணி தலைவர்களுடன் எழுச்சியுடன் கொண்டாடுவோம் என்று,

நம்மையெல்லாம் அன்பால் வழிநடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் பாசமிகு அன்புத் தலைவர் தளபதி அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று, அண்ணன் பிறந்த காஞ்புரம் மாநகரில் தி.மு.க. கொள்கை கூட்டணி கட்சி தலைவர்கள் அனைவரும் பங்கேற்று சிறப்பித்த தி.மு. கழக பவளவிழா மாபெரும் பொதுக் கூட்டத்தை, பார்ப்போர் வியக்கும் வகையில் மிகவும் பிரம்மாண்டமான வகையில் மேடை அமைத்து மாநாடு போல் நடைபெற்ற இம்மாபெரும் பொதுக்கூட்டத்தில்

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திலிருந்து வெள்ளம் போல் திறண்டு வந்து பங்கேற்று சிறப்பித்த மாவட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் வார்டு - கிளைக் கழக நிர்வாகிகள், கழக அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிறதிநிதிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த கழகத்தினருக்கும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அண்ணா பிறந்த புனித பூமியாம், காஞ்சிபுரம் மாநகரில் பவள விழா பொதுக் கூட்டம் முடிவுற்ற சில நிமிடங்களில், கழகத்தினரும் தமிழ்நாட்டு மக்களும் நீண்ட நெடுநாட்களாக மிகவும் எதிர் பார்த்து வந்த துணை முதல்வர் பொறுப்பை, நம்முடைய ஏழுச்சிமிகு இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வழங்கப்பட்டது என்ற தேனான அறிவிப்பை வெளியிட்டு, ஒட்டு மொத்த கழகத்தினரையும், இளைஞர் அணியினரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய நம் நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் தளபதி அவர்களுக்கு கோடானு கோடி நன்றியை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தி.மு. கழகம் தெரிவித்து மகிழ்கிறது.

தம்முடைய அயராத உழைப்பால் உயர்ந்து, ஆற்றல் மிக்க கட்சிப்பணி - ஆட்சிப்பணியால் தொடர் வெற்றிகளை குவித்து வரும் வெற்றி நாயகர்இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதல்வராக பொறுப்பேற்று, தன்னுடைய அளப்பரிய ஆற்றல் மிக்க செயல்பாட்டால் தொடர் வெற்றி நாயகனாக திகழ்வார் என்றும், தமிழகத்தை வெற்றிப் பதையில் அழைத்துச் செல்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்களுக்கு துணை நிற்பார் என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. பெருமித்துடன் நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

திராவிட இயக்கத்தின் தலைவர்களான தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா - முத்தமிழ் அறிஞர் கலைஞர் - அன்புத் தலைவர் தளபதி ஆகியோறை தொடர்ந்து திராவிட இயக்கத்தின் புதிய அத்தியாயமாக, 5ஆம் தலைமுறை தலைவராக உருவாகியுள்ள இளைஞர்களின் இதயம் கவர்ந்த இயம் தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்த நாளை,

“எளியோர் எழுச்சி நாளாக” காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும் பட்டித் தொட்டி எங்கும் மிகவும் சிறப்பான முறையில் எழுச்சியுடன் கோலாகலமாக கொண்டாடுவது என்றும்,

அவர்கள் பிறந்த நாளான நவம்பர் 27ஆம் தேதி காலை 9.00 மணிக்கெல்லாம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும் உள்ள மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூரில் உள்ள அனைத்து வார்டு - கிளைக் கழகங்களில், கழக கொடித் தோரணங்களை கட்டி, ஒலிபெருக்கி அமைத்து கழகக்கொடியை ஏற்றி இணிப்புகளை வழங்கிடுவது என்றும், நம்முடைய மாவட்டத்திலுள்ள 40க்கும் மேற்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ள ஆதரவற்றோர்களுக்கு 27112024 அன்று மதிய உணவு - உடைகளை வழங்கிடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாக முடிவெடுக்கிறது.

இந்திய தேர்தல் ஆணையம் எதிர்வரும் 2025 ஜனவரி 1ஆம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியலை திருத்தம் செய்ய உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்காக திருத்தம் செய்யப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல் அக்டோபர் 29ஆம் தேதி அன்று வெளியிடப்பட உள்ளது.

வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்டக் கழகம் முலம் பெற்று, அந்தந்த ஒன்றியநகரபகுதிபேரூர் செயலாளர்கள், அந்தந்த பாகத்திற்குரிய வார்டுகிளை கழக செயலாளர்கள் மூலம் வழங்கி, அந்தந்த வாக்குச்சவாடி நிலை முகவர்கள் (BLA 2) வசம், அந்தந்த கிளைக் கழக செயலாளர்கள் ஒப்படைத்திட வேண்டும்.

வாக்குச்சாவடி நிலை முகவர்கள், வாக்காளர் பட்டியலை பிரித்து அந்த பாகத்தில் உள்ள தேர்தல் பணிக் குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழகத்தினருடன் இணைந்து வீடு வீடாகச் சென்று உடனடியாக வாக்காளர் பட்டியலை சரி பார்க்கும் முக்கிய பணியில் அனைவரும் ஈடுபட வேண்டும்.

வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணிகள் வருகிற அக்டோபர் 29ஆம் தேதி தொடங்கி, நவம்பர் 28ஆம் தேதி வரை நடைபெறும் என்றும், தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்கான சிறப்பு முகாம்கள், வருகிற 9.11.2024, 10.11.2024, 23.11.2024, 24.11.2024 ஆகிய 4 நாட்கள் சிறப்பு முகாம். காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மாவட்டம் முழுவதும் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

மாவட்டம் முழுவதும் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் அந்த 4 நாட்களிலும், புதிய வாக்காளர்களை சேர்க்கும் பணியிலும், புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களை சேர்க்கும் பணியிலும், தொகுதியிலிருந்து இடம் மாறியவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போதுள்ள வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கம் செய்யும் பணியிலும்,

அந்தந்த வாக்குச்சாவடிகளில் உள்ள வார்டு கிளை கழக செயலாளர்கள், வாக்குச்சவாடி நிலை முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் இணைந்து இரு கரம் கோர்த்து இந்த இன்றியமையாத பணியினை இனிதே சிறப்பாக செய்து முடித்திட வேண்டும் என்றும்,

வருகிற 2026சட்டமன்றத் தேர்தலுக்கு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணி மிகவும் முக்கியமானது என்பதை கவனத்தில் கொண்டு கழகத்தினர் அனைவரும் இணைந்து இப்பணியை முனைப்புடன் செய்திட வேண்டுமென்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

வருகிற 2026 - சட்டமன்றத் தேர்தலை சிறப்பான முறையில் எதிர் கொள்வதற்காக - கழகத்திற்காக அரும்பணியாற்றும் கழகச் செயல் வீரர்களுக்கு, கழகத்தில் பொறுப்புகளை வழங்கி உற்சாகப்படுத்திட வேண்டும் என்றும், அவர்களுக்கு மாநகர ஒன்றிய நகர - பகுதி பேரூர் அளவில் கழகத்தில் உள்ள பல்வேறு அணிகளின் நிர்வாகிகளாக நியமித்து, கழகத்திற்காக உழைப்பவர்களை ஊக்குவித்து, சட்டமன்றத் தேர்தல் பணியில் ஈடுபடுத்திட வேண்டும் என்றும்,

நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும், நம்முடைய உயிரனைய அன்புத் தலைவர் - மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் மாநகர ஒன்றிய - நகர - பேரூர் கழகங்களில் கழகப் பணிகளை சிறப்பான முறையில் செவ்வனே செய்து வரும் கழக செயல் வீரர்களுக்கும் - கழக மகளிர்களுக்கும்,

மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, பொறியாளர் அணி, சுற்றுச் சூழல் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, வழக்கறிஞர் அணி, வர்த்தகர் அணி, மருத்துவர் அணி, தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, ஆதிதிராவிடர் நல அணி, சிறுபான்மையினர் நல அணி, தொழிலாளர் அணி, தொண்டர் அணி, அமைப்பு சாரா ஒட்டுநர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, மீனவர் அணி ஆகிய 21 கழக அணிகளின் நிர்வாகிகளாக நியமனம் செய்திட வேண்டும் என்றும்,

அப்படி கழகத்தின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகளாக நியமனம் செய்தவர்களின் பட்டியலை தாம்பரம் மாநகர செயலாளர் மற்றும் ஒன்றிய - நகர பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள் வருகிற 25102024 ஆம் தேதிக்குள் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைத்திட வேண்டும் என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. ஒருமனதாக தீர்மானிக்கிறது.

“காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.” என்ற பெயரில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, குன்றத்தூர் கிளையில் வங்கிக் கணக்கு துவக்குவது எனவும், இந்த கணக்கை காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் மற்றும் மாவட்ட பெருளாளர் ஆகியோர் கூட்டாக இணைந்து வங்கிக் கணக்கை இயக்குவது எனவும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் ஏகமனதாக முடிவெடுக்கிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; “மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்துவது, மத ரீதியில் பிரச்சினையை ஏற்படுத்துவது போன்றவற்றில் ஈடுபடுகின்றனர்” என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், எதிர்க்கட்சிகளை விமர்சித்திருக்கிறாரே ?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா; மதரீதியாகப் பிரிவினையை ஏற்படுத்தி, பிரச்சினையை உருவாக்க தொடர்ந்து முயற்சி செய்வது யார் என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிந்துகொண்டிருக்கிறார்கள்.**

**மக்களைக் குழப்பி, குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முடியுமா என்று பார்க்கிறார் ஆர்.எஸ்.எஸ். தலைவர். ‘காவிச்’ சாயம், வெளுத்து வருவதை அவரே அறிவார்.**

**“தான் திருடி, பிறரை நம்பாள்” என்று நமது நாட்டுப்புறப் பழமொழி ஒன்று உண்டே !**

# கோபாலபுரத்து செல்வம்!



பூத்துக்குலுங்கும் பூஞ்சோலையாக, மொழிப் பற்றாளர்களின் செம்மொழிப் பூங்காவாக, கழகத்தின் கருவூலமாக விளங்கும் கோபாலபுரத்துப் பண்ணையிலே, எருது வாகனத்து இதயமற்றோன் நுழைந்து ஒரு ஆணி வேரை அறுத்தெடுத்துப் போன இரக்கமற்ற செயலும், அதனால் துவண்டு விழுந்து துடித்த மாசற்ற உறவுகளும், மன்னனே ஆனாலும், “நான் சாய்வதற்கென்றிருந்த ஒற்றைத் தோளையும் இழந்தேனே”, என கதறி நின்ற காட்சியும், கடைசியில் காதல் கணவரின் நெஞ்சிலே விழுந்து கதறிய தமிழ்ச் செல்வியையும் ஊடகங்களில் பார்த்துப் பரிதவித்தவர்களில் நானும் ஒருவன்!

பறிபோனது சாதாரண செல்வமல்ல; முரசொலித்த செல்வம்–பன்னீர் செல்வம். தன்னிகரற்ற பல திறமைகளை தன்னுள் அடக்கிய அன்பு செல்வம்!

எனக்குத் தெரிந்த துரைமுருகன், இராம. நாராயணன் போன்ற பலருக்கு நல்ல நண்பனாகவும், உற்ற வழிகாட்டியாகவும் விளங்கிய செல்வம்.

பதவிகளுக்கு ஆசைப்படாத, ஆனால் எதற்கும் தகுதியுள்ள செல்வம்! கல்லூரி நாட்களிலேயே அவரோடு பழகும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. அவர் அந்தக் குடும்பத்தின் குட்டியப்பா!

உழைக்கத் தயங்காத அந்த செல்வச் சிலந்தி ஆத்மா சாந்தியடையட்டும்!

**“அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு”**



**வி.செ. குகநாதன்**
திரைக்கதை – வசனகர்த்தா மற்றும் இயக்குநர்



புதுக்கோட்டை மாநகராட்சிக்குட்பட்ட நகர் பகுதிகளில் கனமழையில் பாதிப்புக்கு உள்ளான உசிலங்குளம் அய்யனார் திடல் மழை நீர் செல்லும் பகுதிகளை பார்வையிட்டு அதற்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா இணைந்து கள ஆய்வு மேற்கொண்ட புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, உடன் மாநகராட்சி ஆணையர் நாராயணன் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் உடனிருந்தனர்.